2020 பிப்ரவரி 19]

கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். பாலுக்கான கொள்முதல் விலையை அரசு உயர்த்திக் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலும், சரியான நேரத்தில் பணப் பட்டுவாடா செய்யப்படுகின்ற காரணத்தினாலும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விற்பனை செய்கின்றார்கள். ஆகவே, எவ்வளவு பால் அங்கே வருகின்றதோ, அதற்குத் தேவையான அளவிற்கு அங்கே பால் குளிரூட்டும் நிலையம் இருக்கிறது. ஆகவே, இன்னும் பால் அங்கே அதிகமாக வருகின்றபட்சத்தில், புதிதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

தொழிற்பேட்டை

***36624—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்வழியில் மகத்தான மக்கள் தொண்டில், முத்தான 3 ஆண்டுகளை நிறைவு செய்து, நான்காம் ஆண்டில் நல்லாட்சியைத் தொடங்கியுள்ள எங்கள் சாமானிய முதல்வர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்குத் துணையாக இருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் 100 விழுக்காடு ஏற்றுமதிக்கான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிறுவனங்களை மட்டுமே அமைக்க இயலும் என்ற நிலையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பிரத்யேக தொழிற்பேட்டையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டம் இரண்டு மாதங்களுக்கு முன்பாகப் பிரிக்கப்பட்டு, ஒரு சிறிய பகுதியை உள்ளடக்கி, காஞ்சிபுரம், உத்திரமேரூர், திருப்பெரும்புதூர் என்று மூன்று சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சிறிய மாவட்டமாக சுருக்கப்பட்டிருக்கிறது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த மண்ணிற்கு அரசு செய்திருக்கக்கூடிய நிலை இதுதானா என்ற வருத்தத்தோடு நாங்கள் எல்லாம் இருக்கின்ற நிலையில், அங்கே தொழிற்சாலைகள் அதிகம் இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. தொழிற்பேட்டை ஒன்று இருக்கிறது என்றாலும், அங்கே புதிய தொழிற்சாலைகளை உருவாக்கவேண்டும் என்பதற்காகத்தான், இந்தக் கேள்வியை நான் எழுப்பியிருக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், IT sector என்று சொல்லக்கூடிய தகவல் தொழில்நுட்பத் துறையின் பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. காஞ்சிபுரம் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்தபோது OMR என்ற இராஜீவ் காந்தி சாலையில் அமைந்திருக்கக்கூடிய தொழில் நிறுவனங்களும் உள்ளடக்கியிருந்தன. இந்த நிலையில், காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், IT Giants என்று சொல்லக்கூடிய TCS நிறுவனம், ரூ.900 கோடியில் முதலீடு செய்வதற்காகத் தயாராக இருக்கிறது. அதேபோல், INFOSYS நிறுவனம் ரூ.336 கோடியில் ஒரு IT sector–ஐ உருவாக்குவதற்காக மத்திய அரசிடம் விண்ணப்பித்திருக்கிறது. இந்த நிலையில், இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் தேவைப்படுகின்ற நிலங்கள் சற்றொப்ப 12 ஏக்கர் என்ற அளவிலேயே இருக்கிறது என்பதைக் கருத்தில்கொண்டு, காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை ஊராட்சியில் அமைந்திருக்கக்கூடிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இன்னொரு கேள்வி இருக்கிறது. சுருக்கமாக முடியுங்கள்.

2020 பிப்ரவரி 19]

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் அதற்கான நிலம் இருக்கிறது. எனவே, அதனை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தொகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏதும் இல்லை. இருந்தபோதிலும், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் அருகிலுள்ள திருப்பெரும்புதூரில் SEZ எனப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் Electronics மற்றும் Electricals தொடர்பான நிறுவனங்களை நிறுவுவதற்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்துள்ளது. இதில் Foxconn, Flextronics, Samsung, Salcomp போன்ற உலகப் பிரசித்திபெற்ற Electronics மற்றும் cellphone துறையைச் சார்ந்த தொழில் நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலையை அமைத்துள்ளனர். இவற்றில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 60 சதவிகிதத்திற்கும் மேலாக பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த காரப்பேட்டை பகுதியில், அரசு புறம்போக்கு நிலங்களைக் கண்டறிந்து தெரிவிக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, அங்கு ஒரு புதிய தொழிற்பேட்டையை அமைப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் தேவையான அளவிற்கு அரசு புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அதோடுமட்டுமில்லாமல், அதை ஒட்டியிருக்கக்கூடிய உத்திரமேரூர் சட்டமன்றத்

தொகுதியிலும் சாலவாக்கம் பகுதியின் அருகில் இருக்கக்கூடிய பகுதிகளிலும், ஏற்கெனவே அதற்கான நிலங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கக்கூடிய நிலையில், அங்கெல்லாம் புதிய தொழிற்பேட்டையை உருவாக்குவதன் மூலமாக வேலைவாய்ப்பினைப் பெருக்கிட முடியும். இதைக் கருத்தில்கொண்டும், Plastic to Petro–chemicals என்று சொல்லக்கூடிய petro products–க்காக, நகராட்சியினுடைய கழிவுகள், தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய plastic கழிவுகளைக் கொண்டு furnace oil–ஐ தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையைத் துவங்கிட இயலும். அதன்மூலமாக மின் உற்பத்தி மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படுகின்ற furnace oil–ஐ விற்பனை செய்யக்கூடிய வாய்ப்பிருக்கும். அதோடு, Biomass Electricity என்று சொல்லக்கூடிய வகையில், விவசாயக் கழிவுப் பொருட்கள் மற்றும் தாவரக் கழிவுகளைக் கொண்டு Biomass Electricity–ஐ தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையைத் தொடங்குவதற்கும் வாய்ப்பிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–10

அதேபோன்று, காஞ்சிபுரத்தைச் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் இருக்கின்றன. அந்த அரிசி ஆலைகளிலிருந்து கழிவுப் பொருட்களாகக் கிடைக்கக்கூடிய தவிட்டிலிருந்து, solvent extract–லிருந்து, எண்ணெய் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையைத் தொடங்குவதன் மூலமாக அங்கே பெரிய அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்க முடியும் என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

அதுபோல், காஞ்சிபுரத்தில் பட்டுத் தொழில் செய்பவர்கள் நிரம்ப உள்ளார்கள். பட்டுத்தொழிலைச் சார்ந்திருக்கக்கூடிய ஜவுளித் துறையும் இருக்கிறது. எனவே, பட்டு மற்றும் ஜவுளித் துறையினை நவீனப்படுத்துவது என்பது மிகவும் முக்கியமானதாகும். பழமைத் தன்மையாக அவை இருக்கின்ற காரணத்தினால், இத்தொழிலினை நவீனப்படுத்த, இடத்தின் தேவை அதிகமாக இருக்கிறது. தறிக்குத் தேவைப்படுகின்ற இடம் அதிகம். இப்பொழுதெல்லாம் computer–மூலம் பல்வேறு தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டு, தொழிற்சாலையாக அவை வளர்ந்து வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசே அதனை முன்னெடுத்து, பட்டு மற்றும் ஜவுளித் துறைக்கான

2020 பிப்ரவரி 19]

நவீனப்படுத்தப்பட்ட தொழிற்சாலையை உருவாக்குவதன் மூலமாக இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பினையும் வழங்கமுடியும்.

காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இளைஞர்களுக்கென சற்றொப்ப 6 பொறியியல் கல்லூரிகள், 2 polytechnic *கல்லூரிகள் மற்றும்* I.T.I. *போன்ற கல்வி நிறுவனங்கள் உள்ளன. இந்த நிலையில், இலட்சக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்பில்லாமல் காத்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதை அரசு கவனத்திலே கொண்டு, புதிய தொழிற்சாலைகளை உள்ளடக்கிய சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டையை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று தொழில்கள் சார்ந்த தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான பல்வேறு ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றார்கள். ஒன்று,* rice mills–*லிருந்து வரக்கூடிய தவிடுமூலம் பெறக்கூடிய பொருளைக் கொண்டு ஒரு தொழிற்சாலையும், அதேபோன்று, பட்டுத் தொழிலை விரிவுபடுத்துவதற்காக ஒரு தொழிற்சாலையும் உள்ளிட்ட மூன்று தொழிற்சாலைகள் புதியதாக* MSME *மூலமாகத் தொடங்கப்பட வேண்டுமென்று ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றார்கள்.*

அதேபோன்று, மாண்புமிகு உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட, உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிறுபினாயூர், அன்னாத்தூர் போன்ற இடங்களில் புதிய தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அதேபோன்று, நம்முடைய கடலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய நெய்வேலி, காடாம்புலியூரில் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்காக ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. அது சம்பந்தமாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களோடு, மாவட்ட நிருவாகம் மற்றும் SIDCO *நிறுவனம் இணைந்து 4–8–2018 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் நிலம், முந்திரி*

சாகுபடிக்காக பண்ருட்டி பஞ்சாயத்து நிருவாகத்தால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்தக் குத்தகையினை இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலும், இப்பணிக்காக அணுகு சாலை அமைப்பதற்கு 100 மீட்டர் தொலைவிலுள்ள நிலம் கண்டறியப்பட்டு, அந்த நிலத்தின் உரிமையாளரிடமிருந்து அணுகு சாலைக்கான நிலத்தினைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு தனியர், திரு. தவமுருகன் அவர்கள், அரசால் ஏற்க இயலாத பல நிபந்தனைகளைத் தெரிவித்துள்ளார்கள். அன்னாரிடமிருந்து மேற்படி நிலத்தினைப் பெற, அரசு வழிகாட்டுதல்களின்படி SIDCO நிறுவனத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் காரப்பேட்டை பகுதியிலும், அதேபோல, உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அன்னாத்தூர், சிறுபினாயூர் போன்ற இடங்களிலும் தொழிற்சாலைகள் அமைக்க மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். விவசாயிகளின் காவலன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், அவருக்குத் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த, கொங்கு மண்டலத்து இளைஞர், உள்ளாட்சியில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கும் அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020 பிப்ரவரி 19]

கோவை மாவட்டத்தில் மிகவும் பிரசித்திபெற்ற தொழில் தங்க நகைத் தொழில். இந்தியாவிலேயே மும்பைக்கு அடுத்தபடியாக கோவையில்தான் அதிகப்படியான நகைகள் தயாரிக்கப்பட்டு, விற்கப்படுகின்றன. அப்படிப்பட்ட அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் இப்போது மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு சார்பாக ஒரு தங்க நகை தொழிற் பூங்காவை அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் எண்ணற்ற தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக, என்னுடைய கோவை தெற்கு தொகுதியில்தான், 'விஸ்வகர்மா' என்று அழைக்கப்படும், தங்க நகைத் தொழில் செய்யும் தொழிலாளர்கள் அதிகமாக உள்ளார்கள். ஆகையால், அங்கு ஒரு தங்க நகை தொழிற் பூங்கா அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அதே கோரிக்கையை ஏற்கெனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள்கூட வைத்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் தொகுதி, பேரூர் வட்டம், பூலுவாப்பட்டியில் அவர் சொல்லியிருக்கக்கூடிய தங்க நகை தயாரிப்பு சம்பந்தமான தொழில் தொடங்குவதற்காக அரசு நிலம் கண்டறியப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நிச்சயமாக எடுத்துச் சென்று, தங்க நகை தயாரிப்பதற்கான தொழிற்பேட்டை அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். நாகராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*